
# பாடம் 10



## ஒரு கருத்துப் பொருள்

***நான் தேவனுடைய பிள்ளையாவதற்கு சிருஷ்டிகரான தேவன் இங்கே வந்திருக்கிறார்!***

நான் தேவனுடைய பிள்ளையாவதற்கு சிருஷ்டிகரான தேவன் இங்கே வந்திருக்கிறார்!

## வேதாகமக் கதை

***நான் தேவனுடைய பிள்ளையாவதற்காகவே சிருஷ்டிகரான தேவன் இங்கு வந்திருக்கிறார் என்பதைக் கற்பிக்கும் வேதாகமக் கதையை உபயோகியுங்கள்!***

**நற்செய்தி கதைப்புத்தகம் ஐந்து. பக்கம் 2-19.** *சிருஷ்டிரான தேவன் இங்கே இருக்கிறார்!*

**தேவையான பொருட்கள்:** வரைகிறதற்குக் கரும்பலகை மற்றும் சுண்ணாம்பு எழுதுகோல், அல்லது மண் மற்றும் குச்சி, அல்லது தாள் மற்றும் எழுதுகோல். குழந்தைகளுக்கு வரைபடக் காகிதம் அல்லது தாள் மற்றும் எழுதுகோல் மற்றும் அழிப்பான்.

வரைந்து, கதையைக் கூறுங்கள்.

*நற்செய்தி கதைப்புத்தகம் ஐந்து* பக்கம் 8-15 உள்ள கதையை வாசித்து, அதில் உள்ள சித்திரங்களையும் குழந்தைகளுக்குக் காண்பியுங்கள்.

1, 2, 3 கதையைத் தொடங்குவோம்…

சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது, 'உங்களை என்றென்றுமுள்ள சதாகாலமும் நான் விடுவிப்பேன்.' ஓர் இளம் பெண்ணை என்னால் பார்க்க முடிகிறது. அவள் பெயர் மரியாள். சிருஷ்டிகரான தேவனின் நல்ல ஆவி மேரியிடம் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, 'நீ ஒரு மகனைப் பெறுவாய். இயேசு என்பது அவரது பெயராகும். இயேசு சிருஷ்டிகரான தேவனின் ஆவியிடமிருந்து வந்தவர். இயேசு உங்களை என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிப்பார்.'


ஒரு வாலிபனை என்னால் பார்க்க முடிகிறது. அவன் பெயர் யோசேப்பு. யோசேப்பு முன்னோர் அரசனான தாவீதின் குலத்தில் வந்தவர். தாவீது அரசன் ஆபிரகாமின் குலத்தில் வந்தவர்.

சிருஷ்டிகரான தேவன் ஒரு நல்ல ஆவியிடம் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, 'யோசேப்பிடம் சென்று மரியாள் அவனது மனைவியாக வேண்டும். மரியாள் ஒரு மகனைப் பெறுவாள். இயேசு என்பது அவரது பெயராகும். இயேசு சிருஷ்டிகரான தேவனின் ஆவியிடமிருந்து வந்தவர். இயேசு உங்களை என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிப்பார் என்று சொல்.'

சிருஷ்டிகரான தேவன் வருகிறார்…

# பாடம் 10








காலம் கடந்தது. இரவின் வானத்தில் சிருஷ்டிகரான தேவன் ஒரு புதிய நட்சத்திரத்தை உண்டாக்குவதை என்னால் பார்க்க முடிகிறது. புதிய நட்சத்திரம் ஒளிவீசுகிறது…ஒளிவீசுகிறது…ஒளிவீசுகிறது.



ஞானிகள் இரவு வானத்தை உற்று உற்றுப் பார்ப்பதை என்னால் பார்க்க முடிகிறது.புதிய நட்சத்திரம் சுட்டிக்காட்டுகிறது…சுட்டிக்காட்டுகிறது… சுட்டிக்காட்டுகிறது.

ஞானிகள் புதிய நட்சத்திரத்தைப் பின்பற்றி ஒரு சிற்றூருக்கு… சிறிய பாதை வழியாக… ஒரு சிறு கொட்டகைக்குச் செல்வதை என்னால் பார்க்க முடிகிறது.



யோசேப்பு, அவன் மனைவி மரியாள், பாலகன் இயேசுவை என்னால் பார்க்க முடிகிறது. சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது, ‘இச்சிறு பாலகன் இயேசு உங்களை என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிப்பார்.’

சிறு பாலகன் இயேசுவுக்கு ஞானிகள் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது.

சிருஷ்டிகரான தேவன், ஒரு சிறு பாலகனாக உங்களை என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிக்க வந்திருக்கிறார். சிருஷ்டிகரான தேவன் இங்கே இருக்கிறார்!



அதே இரவில்…

மேய்ப்பர்களை என்னால் பார்க்க முடிகிறது. ஆடுகளை என்னால் பார்க்க முடிகிறது.



சிருஷ்டிகரான தேவன் ஒரு நல்ல ஆவியிடம் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, ‘மேய்ப்பர்களிடம் போய் பயப்படாதீர்கள், உங்களுக்கு நற்செய்தி தருகிறேன். உங்களை என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிக்க இயேசு இங்கே வந்திருக்கிறார் என்று சொல்.’



மிக மிகப் பிரகாசமான வெளிச்சத்தை என்னால் பார்க்க முடிகிறது.
மிக மிகப் பிரகாசமான வெளிச்சம் ஓர் நல்ல ஆவி என்பதை என்னால் பார்க்க முடிகிறது.
நல்ல ஆவி மேய்ப்பர்களிடம் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, ‘பயப்படாதீர்கள், நான் நற்செய்தி தருகிறேன். உங்களை என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிக்க இயேசு இங்கே வந்திருக்கிறார்.’



சிருஷ்டிகரான தேவனுக்கு ஒன்று… இரண்டு… மூன்று… நான்கு… ஐந்து… ஆறு… ஏழு… பலப் பல நல்ல ஆவிகள் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது.

பலப் பல நல்ல ஆவிகள் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, ‘சிருஷ்டிகரான தேவனைப் பாடுங்கள். இயேசுவுக்குப் பாடும் ஒவ்வொருவருக்கும் சமாதானம்.’


# பாடம் 10

அந்த பலப் பல நல்ல ஆவிகள் வானத்தில் மேலே…மேலே…செல்வதை என்னால் பார்க்க முடிகிறது.



மேய்ப்பர்கள் இயேசுவுக்குப் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது. சிருஷ்டிகரான தேவன் ஒரு சிறு பாலகனாக, உங்களை என்றென்றுமுள்ள தாகாலமும் விடுவிக்க வந்திருக்கிறார். சிருஷ்டிகரான தேவன் இங்கே இருக்கிறார்!

**குழந்தைகளையும் கதையை வரையச் சொல்லுங்கள்.**



## செய்கைப் பாடல்

***சிருஷ்டிகரான தேவன் நான் தேவனுடைய பிள்ளையாவதற்காக இங்கே வந்திருக்கிறார் என்று கற்பிக்கும் ஒரு செய்கைப் பாடலைக் கற்பியுங்கள்!***

என்னை தேடி இயேசு வந்தார்
பாலனாக பிறந்துவிட்டார் } 2
ஆனந்தமாய் நான் பாடுவேன்
அனுதினம் மகிழ்ந்திடுவேன் } 2

நேசிக்கிறேன் நான் நேசிக்கிறேன் - 2
எனக்காக பூமியில் பிறந்ததினால்
நேசிக்கிறேன் தினம் நேசிக்கிறேன் } 2

## பொருள் கண்டு கற்றல்

***ஒரு பொருள் அல்லது படைப்பைக் கொண்டு சிருஷ்டிகரான தேவன் நான் தேவனுடைய பிள்ளையாவதற்காகவே இங்கே வந்திருக்கிறார் என்று கற்பியுங்கள்!***

**தேவையான பொருள்கள்:** பெட்டி மற்றும் முகம் பார்க்கும் கண்ணாடி. வகுப்பு ஆரம்பிக்கும் முன் கண்ணாடியைப் பெட்டிக்குள் வைக்கவும்.

குழந்தைகளிடம், பெட்டிக்குள் சிருஷ்டிகரான தேவனின் மிக விசேஷமான படைப்பாகிய ஒரு பிள்ளையின் ஓவியம் இருக்கிறது என்று கூறுங்கள். பின் குழந்தைகள் ஒருவர் பின் ஒருவராக வந்து பெட்டிக்குள் எட்டிப் பார்த்துவிட்டு, ஒரு வார்த்தையும் சொல்லாமல் தங்கள் இடங்களில் போய் அமரச் சொல்லுங்கள். அனைவரும் பெட்டிக்குள் பார்த்து முடியும் வரை ஒருவரும் ஒன்றும் சொல்லக் கூடாது.

அனைவரும் பெட்டிக்குள் பார்த்த பின், கீழுள்ள கேள்விகளைக் கேளுங்கள்.

**பெட்டிக்குள் யாரைப் பார்த்தீர்கள்? அந்த விசேஷமான பிள்ளை நீங்களாயிருப்பீர்கள் என்று எண்ணிப்பார்த்தீர்களா? நீ சிருஷ்டிகரான தேவனின் குழந்தை என்றும், அவருக்கு நீ மிகவும் விசேஷித்தவன்/ள் என்று நீ அறிவாயா?**

இயேசு கிறிஸ்து சிருஷ்டிகரான தேவ ஆவியிலிருந்து வந்தார் என்று குழந்தைகளுக்கு விளக்குங்கள். இயேசுவே சிருஷ்டிகரான தேவன். அவர் உலகத்திற்கு சிறுபாலகனாக உன்னை என்றென்றைக்கும் மீட்பதற்காகவே வந்தார். நாம் இயேசுவை விசுவாசிக்கும் போது, சிருஷ்டிகரான தேவனின் குழந்தைகளாகிறோம்.

நான் தேவனுடைய பிள்ளையாவதற்கு சிருஷ்டிகரான தேவன் இங்கே வந்திருக்கிறார்!

# பாடம் 10

## வேத வசன மனப்பாட விளையாட்டு

***நான் தேவனுடைய பிள்ளையாவதற்காகவே சிருஷ்டிகரான தேவன் இங்கே வந்திருக்கிறார் என்பதைக் கற்பிக்கும் வேத வசனத்தை உபயோகியுங்கள்!***

*கர்த்தர்* என்பது சிருஷ்டிகரான தேவனின் மற்றொரு நாமம் என்று விளக்குங்கள்.

**1 யோவான் 5:1** *'இயேசுவே கிறிஸ்து* என நம்புகிற மக்கள் தேவனின் பிள்ளைகளாவர்.'*

**தேவையான பொருட்கள்:** எழுதுவதற்குக் கரும்பலகை மற்றும் சுண்ணாம்பு எழுதுகோல், அல்லது மண் மற்றும் குச்சி, அல்லது தாள் மற்றும் எழுதுகோல்.

மனப்பாட வசனத்தை எழுதி, நீங்கள் எழுத எழுத உங்கள் பின் அவ்வசனத்தைக் குழந்தைகளைத் திரும்பச் சொல்லச் சொல்லுங்கள். அவர்கள் இன்னும் எழுத வாசிக்க அறியவில்லை என்றால் வசனத்தை எழுத வேண்டாம்.

வேதவசனத்தை வாசியுங்கள். அதில் ஏதாவது மூன்று வார்த்தைகளை அழித்து விடுங்கள். இப்போது சிறுவர்கள் தாங்களே ஒரு சிறுவனைத் தேர்ந்தெடுத்து, வசனத்தை முழுமையாக நிரப்ப வேண்டும். பின் வசனத்தை சத்தமாகச் சொல்ல வேண்டும். வேறு மூன்று வார்த்தைகளை அழித்திடுங்கள்.

இப்பொழுது சிறுமிகள் தங்களுக்குள் ஒரு சிறுமியை வசனத்தை நிரப்பத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின அனைவரும் வசனத்தைச் சொல்ல வேண்டும்.

மேலும் ஒருமுறை வசனத்தை எல்லாரும் சேர்ந்து சொல்ல வேண்டும்.

நான் தேவனுடைய பிள்ளையாவதற்கு சிருஷ்டிகரான தேவன் இங்கே வந்திருக்கிறார்!

## நடைமுறை செயல்படுத்தல்

***ஒரு நடைமுறை செயல்படுத்தலைக் கொண்டு சிருஷ்டிகரான தேவன் நான் தேவனுடைய பிள்ளையாவதற்காகவே இங்க வந்திருக்கிறார் என்று கற்பியுங்கள்!***

சாட்சி: நீங்கள் தேவனுடைய பிள்ளையாக இருப்பதினால் உங்கள் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களைக் குழந்தைகளோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

ஜெபம்: சிருஷ்டிகரான தேவனே சிறு பாலகனாக வந்து, நீர் என்னை என்றென்றும் மீட்டுக் கொண்டதற்காக உமக்கு நன்றி. நான் இயேசுவை விசுவாசிக்கும் போது, சிருஷ்டிகரான தேவனின் பிள்ளையாக இருப்பதற்காக உமக்கு நன்றி. ஆமென்.

*அபிஷேகிக்கப்பட்டவர். நம்மை இரட்சிக்கும் சிருஷ்டிகரான தேவன்.

# பாடம் 11



## ஒரு கருத்துப் பொருள்

*இயேசுவே உலகத்தின் ஒளியானவர்*

இயேசுவே
உலகத்தின்
ஒளியானவர்

## வேதாகமக் கதை

***இயேசுவே உலகத்தின் ஒளி என்று கற்பிக்கும் வேதாகமக் கதையைச் சொல்லுங்கள்***

**நற்செய்தி கதைப்புத்தகம் ஐந்து. பக்கம் 20-29.** *என்னால் பார்க்க முடிகிறது.*

குழந்தைகளோடு சேர்ந்து இக்கதையை நாடகமாக நடித்துக் காட்டுங்கள். குழந்தைகளிடம், 'என்னால் பார்க்க முடிகிறது' என்ற நாடகத்தை நடிக்கப் போகிறோம் என்று கூறுங்கள்.

நடிப்பவர்கள்: கதை வர்ணிப்பவர் மற்றும் இயக்குபவர் (ஆசிரியர்) இயேசு (ஒரு குழந்தை), குருடன் (ஒரு குழந்தை), மதத் தலைவர் (ஒரு குழந்தை), இயேசுவைப் பின்பற்றுவோர் (3 குழந்தைகள்) மக்கள் (நடிக்காத மற்ற எல்லாக் குழந்தைகள்)


*நற்செய்தி கதைப்புத்தகம் ஐந்து* பக்கம் 20-29. வாசித்து, கதையைச் சொல்லுங்கள். நடிக்கும் குழந்தைகள், தங்கள் பகுதியை நடிப்பதற்கு, நீங்கள் வாசிக்கும்போதே அவர்களைக் குறிப்பிட்டு, வழிநடத்துங்கள். குழந்தைகளால் வாசிக்க முடிந்தால், அவர்கள் ஒவ்வொருவரிடம் ஒரு பிரதி *நற்செய்தி கதைப்புத்தகம் ஐந்து* கொடுத்து, கதையைக் கவனித்து, தங்கள் பகுதியை வாசிக்கச் சொல்லுங்கள்.

*எடுத்துக்காட்டு:* பக்கம் 20-21. சந்தையில் இருப்பதுபோல் குழந்தைகள் பாவனை செய்து கொள்ளச் சொல்லுங்கள். 'மக்களாக' நடிக்கும் குழந்தைகள் சந்தையில் பொருட்கள் வாங்க அங்கிங்கு நடப்பவர்கள் போல் நடிக்க வேண்டும். 'குருடன்' போல நடிக்கும் குழந்தை, நடுவில் அமர்ந்து தர்மம் எதிர்பார்த்துக் கையேந்த வேண்டும்.

கதையை வாசித்துக் கூறுங்கள் நீங்கள், 'இயேசுவைப் பின்பற்றுவோர் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது. இக்குருடன் இப்படிப் பிறக்க, கெட்ட செயல் செய்தானா?' என்று வாசித்தபின், இயேசுவைப் பின்பற்றுவோராக நடிக்கும் குழந்தைகளைக் குறிப்பிட்டுக் காட்டுங்கள். அப்பொழுது அவர்கள், 'இக்குருடன் இப்படிப் பிறக்கக் கெட்ட செயல் செய்தானா?' என்று கூறவேண்டும். (அவர்களால் வாசிக்க முடியும் என்றால் வாசிக்கலாம்.) பின் அவர்கள் இயேசுவைப் பின்பற்றி, குருடனைத் தாண்டி நடந்து செல்ல வேண்டும்.

1, 2, 3 நாடகத்தை நடிப்போம்…

# பாடம் 11



## செய்கைப் பாடல்

***இயேசுவே உலகத்தின் ஒளி என்று கற்பிக்கும் செய்கைப் பாடல் ஒன்றை கற்றுக் கொடுங்கள்***

1. இயேசு கற்பித்தார் ஒளி வீசவே
சிறு தீபம் போல இருள் நீக்கவே
அந்தகார லோகில் ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்
2. முதல் அவர்க்காய் ஒளி வீசுவோம்
ஒளி மங்கிடாமல் காத்துக் கொள்ளுவோம்
இயேசு நோக்கிப் பார்க்க ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்
3. பிறர் நன்மைக்கும் ஒளி வீசுவோம்
உலகின் மா இருள் நீக்க முயல்வோம்
பாவம் சாபம் யாவும் பறந்தோடிப்போம்
அங்கும் இங்கும் எங்கும் பிரகாசிப்போம்.

## பொருள் கண்டு கற்றல்

***இயேசுவே உலகத்தின் ஒளி என்பதை ஒரு பொருள் அல்லது படைப்பு கொண்டு கற்பியுங்கள்***

சிருஷ்டிகரான தேவன் உலகத்தில் வெளிச்சம் உண்டாக்கிய போது, இருளைவிட ஒளியே வலிமையானது என்று நமக்குக் காண்பித்தார். ஒளி இருளைப் பின் தள்ளிவிடும்.

இயேசுவே உலகத்தின் ஒளியானவர்

**செயல் விளக்கம்:** பாடம் நடத்தும் அறையை இருட்டாக்குங்கள். பின் ஒரு மெழுகுவர்த்தியையோ அல்லது மின்கல விளக்கையோ (Torch Light) அல்லது மின்விளக்கையோ எரிய வைத்து, ஒரு சிறு விளக்கின் ஒளி எப்படி இருளைப் பின்தள்ளி அகற்றுகிறது என்று விளக்குங்கள். இயேசுவும் இயற்கையான ஒளியைப் போன்றவர். இயேசு நம் ஆவிக்குரிய வெளிச்சமாய் நம் வாழ்வில் இருளாக இருக்கும் தீய ஆவிகள் மற்ற தீய பழக்கவழக்கங்களைப் பின் தள்ளி விடுகிறார். வெளிச்சம் எப்பொழுதும் இருளைவிட வலிமையானது. இயேசுவிற்கு மட்டுமே வாழ்வின் இருளைப் பின்தள்ளும் வல்லமை உண்டு. உன்னையும் என்னையும் என்றென்றைக்கும் மீட்கவே இயேசு உலகத்திற்கு வந்தார்.

## வேத வசன மனப்பாட விளையாட்டு

இயேசுவே உலகத்தின் ஒளி என்று கற்பிக்கும் வேத வசனத்தைக் கற்றுக்கொடுங்கள்.

**யோவான் 8:12** *மீண்டும் இயேசு மக்களோடு பேசினார். அவர், 'நானே உலகத்துக்கு ஒளி. என்னைப் பின்பற்றி வருகிற எவனும் ஒருபோதும் இருளில் வாழமாட்டான். அவன் வாழ்வைத் தருகிற ஒளியைப் பெறுவான்' என்றார்.*

**தேவையான பொருட்கள்:** மஞ்சள் நிற பலூன்கள் மற்றும் நிரந்தர கருப்பு மை பேனா.

# பாடம் 11







மூன்று குழந்தைகளை உங்களுக்கு உதவ முன் அழைத்து ஒவ்வொருவருக்கும் ஒரு மஞ்சள் பலூனைக் கொடுங்கள். அவர்களை அந்த பலூன்களை நன்கு ஊதி காற்று வெளியேறாதபடி கட்டச் சொல்லுங்கள்.

பின் ஊதிய முன்று பலூன்களில் ஒரு பலூனில் இருளை வெளிச்சம் பின் தள்ளுவது போல வரையுங்கள். இரண்டாம் பலூனில் ஒரு பெரிய சிலுவையையும், மூன்றாம் பலூனில் உலக உருண்டையையும் வரைந்து கொள்ளுங்கள். பின் மூன்று குழந்தைகளிடம் ஒவ்வொருவருக்கும் படம் வரையப்பட்டு ஊதின ஒரு பலூனைக் கொடுத்து, மற்ற குழந்தைகள் படங்களைப் பார்க்கும்படி முன் நிற்கச் சொல்லுங்கள்.

குழந்தைகள் அனைவரும் அம்மூன்று பலூன்களிலுள்ள சித்திரங்களையும் பார்த்து, ஒவ்வொன்றும் குறிப்பிடும் வார்த்தை என்ன என்று யூகித்துக் கூற வேண்டும். அவர்களால் சரியாக வார்த்தைகளை யூகிக்க முடியாவிட்டால், நீங்கள் அவர்களுக்கு உதவும் எளிதான துப்புகளைக் கொடுத்து ஊக்கப்படுத்துங்கள். 'ஒளி,' இயேசு 'உலகம்' என்ற வார்த்தைகளைக் கண்டுபிடித்த பின், நான்காவது ஒரு குழந்தையை அழைத்து, வார்த்தைகளுடைய பலூன்களை சரியான வரிசையில் வைக்க சொல்லுங்கள். முதலில் 'இயேசு,' பின் 'உலகம்,' கடைசியாக 'ஒளி.'

'இயேசு உலகத்தின் ஒளி' என்ற வேதவசனத்தை கற்றுக் கொடுங்கள். பின் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு மஞ்சள் நிற பலூனைக் கொடுத்து, அதை ஊதி, கட்டி, பின் சிலுவை, உலகம், இருளைப் பின் தள்ளும் ஒளி ஆகியவற்றை அந்த பலூனில் வரையச் சொல்லுங்கள். எழுத அறிந்தவர்கள் தங்கள் பெயரையும் அந்த பலூனில் எழுதலாம். பின் வேத வசனத்தைக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். குழந்தைகளை வேத வசனத்தை மனப்பாடமாகக் கூறச் சொல்லுங்கள்.

## நடைமுறை செயல்படுத்தல்

***இயேசுவே உலகத்தின் ஒளி என்று கற்பிக்கும் நடைமுறை செயல்படுத்தல் ஒன்றைப் பயன்படுத்துங்கள்***


இயேசுவே உலகத்தின் ஒளியானவர்

நாம் திகில் அடைந்தாலோ, தீய காரியங்களைச் சிந்திக்கவோ, கூறவோ அல்லது செய்தாலோ, சுகவீனமாக இருக்கும்பொழுதோ, எந்நேரத்திலும், 'இயேசு உமக்கு நன்றி. நீர் என்னை நேசித்து, எல்லாத் தீய செயல்களிலிருந்தும் என்னை மீட்டுக் கொண்டீர்' என்று கூறலாம்.

இயேசுவே உலகத்தின் ஒளி. அவர் இருளைவிட வலிமையானவர். இருளைப் பின் தள்ளும் வலிமை இயேசு கிறிஸ்துவிற்கு மட்டும் உள்ளது.

ஜெபம்: சிருஷ்டிகரான தேவனே, நீர் என்னை எப்பொழுதும் நேசிப்பதற்காக உமக்கு நன்றி. இயேசுவே, நீர் உலகத்தின் ஒளியாக இருப்பதினால் உமக்கு நன்றி. இருளைப் பின் தள்ள நீர் உலத்திற்கு வந்ததற்காக உமக்கு நன்றி இயேசுவே. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென்.

# பாடம் 12



## ஒரு கருத்துப் பொருள்

*இயேசு கிறிஸ்து மன்னித்து சமாதானம் தருகிறார்*


இயேசு கிறிஸ்து மன்னித்து சமாதானம் தருகிறார்

## வேதாகமக் கதை

***இயேசு மன்னித்து சமாதானம் தருகிறார் என்று கற்பிக்கும் கதையைக் கூறுங்கள்***

**நற்செய்தி கதைப் புத்தகம் ஐந்து. பக்கம் 30-36.** *சமாதானம் தருபவர்.*

**தேவையான பொருட்கள்:** வரைவதற்குக் கரும்பலகை, சுண்ணாம்பு எழுதுகோல் அல்லது குச்சி மற்றும் மண், அல்லது காகிதம் மற்றும் எழுதுகோல். குழந்தைகளுக்கு வரைபட காகிதம் அல்லது தாள் மற்றும் எழுதுகோல் மற்றும் அழிப்பான்.



படம் வரைந்து கதையைச் சொல்லுங்கள். ஒவ்வொரு பக்கத்தையும் வாசித்து முடித்தபின் குழந்தைகளிடம் கேள்வி கேளுங்கள்.

1, 2, 3 கதை கேட்கலாம்…

மற்றொரு நாள், வேறு நேரம், வேறு இடம்.






ஒரு மனுஷனை என்னால் பார்க்க முடிகிறது. அவன் பெயர் சீமோன். சீமோன் இயேசுவிடம் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது, 'தயவாக என் வீட்டிற்கு வாருங்கள்.' சீமோனையும், இயேசுவையும் சீமோனின் வீட்டிற்குள் என்னால் பார்க்க முடிகிறது. சீமோனின் வீட்டிற்குள் ஒரு பெண்ணையும் என்னால் பார்க்க முடிகிறது. இப்பெண் பல தீய செயல்களைச் செய்திருக்கிறாள். இப்பெண் இயேசுவின் பாதங்களில் விழுவதை என்னால் பார்க்க முடிகிறது. இப்பெண் அழுவதை என்னால் பார்க்க முடிகிறது. அவளது கண்ணீர் இயேசுவின் பாதங்களின் மேல் விழுகிறது. அப்பெண் இயேசுவின் பாதங்களைத் தன் தலைமுடியால் துடைப்பதை என்னால் பார்க்க முடிகிறது. இயேசு அப்பெண்ணிடம் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, 'நீ இதுவரை செய்துள்ள எல்லா தீய செயல்களையும் நான் மன்னிக்கிறேன். சமாதானத்தோட போ.'

இயேசு மாத்திரமே சமாதானம் தருகிறார். இருளைப் பின் தள்ளும் வல்லமை இயேசுவுக்கு மாத்திரமே உண்டு.

சிருஷ்டிகரான தேவன் இங்கே இருக்கிறார்!

# பாடம் 12

## செய்கைப் பாடல்



*இயேசு கிறிஸ்து மன்னித்து சமாதானம் தருபவர் என்பதை கற்பிக்கும் ஒரு செய்கைப் பாடல்*

இராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தா! மகிமை! அல்லேலுயா (2)

இயேசு சமாதான பிரபு! மகிமை! அல்லேலுயா (2)

இராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தா மகிமை! அல்லேலுயா

## பொருள் கண்டு கற்றல்

*ஒரு பொருள் கொண்டு, இயேசு மன்னித்து சமாதானம் தருபவர் என்ற கருத்தைக் கற்பியுங்கள்*

**தேவையான பொருட்கள்:** குழந்தைகளால் சுமக்கக் கூடிய அளவிலான 3 பெரிய கற்கள்.

இரண்டு குழந்தைகளை உங்களுக்கு உதவ அழையுங்கள். ஒருவர் இயேசுவாகவும் (குறிப்பிட்டுக் காட்டுங்கள்), அடுத்த குழந்தை (குறிப்பிட்டுக் காட்டுங்கள்) இயேசுவைக் குறித்து அறியாத, இயேசுவை நோக்கிப் பார்க்காத, இயேசுவைத் தொழுது கொள்ளாத ஒரு குழந்தையாகவும் நடிக்கப் போகிறார்கள் என்று மற்றக் குழந்தைகளிடம் கூறுங்கள்.

இயேசுவை அறியாதவனாக நடிக்கும் குழந்தை, ஒரு தீய எண்ணத்தை யோசிக்கிறான் என்று கூறுங்கள். அவனிடம் ஒரு கல்லைக் கொடுங்கள். இக்கல்லைப் போல், இயேசுவை அறியாமல் தீய எண்ணத்தோடு இருப்பவருக்கும் அது பாரமாக இருக்கும் என்று விளக்குங்கள்.

இயேசு கிறிஸ்து மன்னித்து சமாதானம் தருகிறார்

இயேசுவை அறியாதவனான நடிக்கும் குழந்தை, ஒரு தீய செயலைச் செய்கிறான் என்று கூறுங்கள். அவனிடம் மேலும் ஒரு கல்லைக் கொடுங்கள். இக்கல்லைப் போல், இயேசுவை அறியாமல் தீய செயல்களைச் செய்பவர்களுக்கு அது ஒரு பாரமாக இருக்கும்.

இயேசுவை அறியாதவனாக நடிக்கும் குழந்தை, தீயதான வார்த்தைகளைப் பேசுகிறான் என்று விளக்குங்கள். அவனிடம் மூன்றாவது கல்லையும் கொடுங்கள். இக்கல்லைப்போல், இயேசுவை அறியாமல் தீயக் காரியங்களைப் பேசுபவர்களுக்கும் அது பாரமாக இருக்கும் என்று எடுத்துக்கூறுங்கள்.

இயேசுவை அறியாமல் மூன்று பாரமான கற்களைத் தூக்கிக் கொண்டிருக்கும் குழந்தையை இப்பொழுது இயேசுவை நோக்கிப் பார்க்கச் சொல்லுங்கள். இயேசுவாக நடிக்கும் குழந்தை, அக்கற்களை இப்பொழுது இயேசுவை அறியாத குழந்தையிடம் வாங்கி சுமக்க வேண்டும் என்று கூறுங்கள்.

இயேசுவே சமாதானம் தர முடியும். இருளைப் பின் தள்ளிப் போடும் வல்லமை இயேசுவிற்கு மட்டுமே உண்டு.

# பாடம் 12

## வேத வசன மனப்பாட விளையாட்டு

***இயேசு மன்னித்து சமாதானம் தருபவர் என்று கற்பிக்கும் வேத வசனத்தை உபயோகப்படுத்துங்கள்***

**லூக்கா 7:50** *இயேசு அப்பெண்ணை நோக்கி, "நீ விசுவாசித்ததால் பாவங்களினின்று விடுதலையடைந்தாய். நிம்மதியோடு போ" என்றார்.*

வேத வசனத்தை பாடி கற்றுக் கொடுத்து, குழந்தைகளையும் (ஆசிரியர்) பின் சொல்லவையுங்கள். குழந்தைகள் வசனத்தை மனப்பாடம் செய்யும் வரை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுங்கள்.

பின் ராகம், தாளம், செய்கையோடு, வசனத்தைக் குழந்தைகள் பாடும்படி சொல்லிக் கொடுங்கள்.

ஆசிரியர்: இயேசு குழந்தைகள்: இயேசு
ஆசிரியர்: அப்பெண்ணை நோக்கி, குழந்தைகள்: அப்பெண்ணை நோக்கி,
ஆசிரியர்: 'நீ விசுவாசித்ததால் குழந்தைகள்: 'நீ விசுவாசித்ததால்
ஆசிரியர்: பாவங்களினின்று குழந்தைகள்: பாவங்களினின்று
ஆசிரியர்: விடுதலையடைந்தாய். குழந்தைகள்: விடுதலையடைந்தாய்.
ஆசிரியர்: நிம்மதியோடு போ' என்றார். குழந்தைகள்: நிம்மதியோடு போ' என்றார்.
ஆசிரியர்: லூக்கா அதிகாரம் 7. குழந்தைகள்: லூக்கா அதிகாரம் 7.
ஆசிரியர்: வசனம் 50. குழந்தைகள்: வசனம் 50.

## நடைமுறை செயல்படுத்தல்

***இயேசு மன்னித்து, சமாதானம் தருகிறவர் என்ற கருத்தை ஒரு நடைமுறை செயல்படுத்தல் மூலம் கற்பியுங்கள்***

இயேசு கிறிஸ்து மன்னித்து சமாதானம் தருகிறார்

இயேசுவால் மட்டும் சமாதானம் தரமுடியும். இயேசுவிற்கு மட்டும் இருளை பின்தள்ளும் வல்லமை உண்டு.

நாம் இயேசுவைத் தெரிந்து கொள்ளும் போது, நாம் தீய எண்ணம் கொண்டாலோ, தீய செயல்களைச் செய்தாலோ, பேசினாலோ, நம் பாரத்தை எல்லாம் நீக்கிடுவார். ஆகவே நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

**ஜெபம்:** இயேசு கிறிஸ்துவே, நான் தீய எண்ணத்தை யோசித்தாலும், தீய செயல்களைச் செய்தாலோ, சொன்னாலோ நீர் என் பாரத்தையெல்லாம் நீக்கி விடுகிறபடியால் உமக்கு நன்றி. நீர் என்னை மன்னிக்கிறதினால் உமக்கு நன்றி. எனக்கு சமாதானம் தருவதினால் இயேசுவே உமக்கு நன்றி. புதிய எண்ணங்களையும் புதிய வாழ்வையும் எனக்குத் தந்ததினால் உமக்கு நன்றி. என்றென்றைக்கும் சதா காலங்களிலும் என்னை மீட்கும்படி நீர் வந்தபடியால் உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

**பரிசு: ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களது பிரதி** *நற்செய்தி கதைப்புத்தகம் ஐந்தை* கொடுங்கள். ஒவ்வொரு குழந்தையும் *நற்செய்தி கதைப்புத்தகம் ஐந்தை* வாசிக்க உதவி செய்யுங்கள்.

# பாடம் 13



## ஒரு கருத்துப் பொருள்

*இயேசு சுகமாக்குகிறார்*

இயேசு சுகமாக்குகிறார்!

## வேதாகமக் கதை

***இயேசு சுகமாக்குகிறார் என்று கற்பிக்கும் கதையைக் கூறுங்கள்***

**நற்செய்தி கதைப் புத்தகம் ஆறு. பக்கம் 2-15.** *இயேசு சுகமாக்குகிறார்.*

குழந்தைகளோடு சேர்ந்து இக்கதையை நாடகமாக நடியுங்கள். 'இயேசு சுகமாக்குகிறார்' என்று ஒரு நாடகம் நடிக்கப் போகிறோம் என்று குழந்தைகளிடம் கூறுங்கள்.

பக்கம் 2-15 உள்ள கதையை வாசித்து, *நற்செய்தி கதைப் புத்தகம் ஆறில்* உள்ள சித்திரங்களையும் குழந்தைகளுக்குக் காண்பியுங்கள்.

குழந்தைகளிடம் கதையைக் குறித்த கேள்விகளைக் கேளுங்கள். சரியான பதில் தந்தால் பாராட்டுங்கள். தவறான பதில் தந்தால் நன்முயற்சி ஆனால் சரியான பதில் அல்ல என்று ஊக்கப்படுத்துங்கள். சரியான பதில் தரும்வரை அதே கேள்வியைக் கேளுங்கள்.

கீழே சில கேள்விகள்.

**யவீரு உதவிக்கு யாரிடம் ஓடினான்?** இயேசுவிடம்.

**யவீரு யாரிடம், 'அவளைத் தொடும். அவள் நலமாகிவிடுவாள்' என்று கூறினான்?**
இயேசுவிடம்.

**யவீரு யாரிடம், 'அவளைத் தொடும். அவள் வாழ்வாள்' என்று சொன்னான்?**
இயேசுவிடம்.


**யார், 'இயேசுவின் ஒரு தொடுதலால் நான் நலமாகிவிட்டேன்' என்று கூறியது?**
மிகவும் வியாதிப்பட்ட பெண்.

**மிகவும் வியாதிப்பட்டு இப்போது இறந்துவிட்ட சிறுமியிடம் இயேசு என்ன கூறினார்?**
சிறுமியே எழுந்திரு!


**இயேசு இறந்துவிட்ட சிறுமியிடம் பேசின பிறகு என்ன நடந்தது?**
சிறுமி வாழ்கிறாள்!

**இருளைப் பின் தள்ளும் வல்லமை யாருக்கு உண்டு?** இயேசுவுக்கு.

# பாடம் 13



## செய்கைப் பாடல்



*இயேசு சுகமாக்குகிறார் என்று கற்பிக்கும் ஒரு செய்கைப் பாடலை உபயோகியுங்கள்*

அல்லேலு அல்லேலு அல்லேலூயா } 2
இயேசு சுகமாக்குகிறார்
இயேசு அல்லேலூயா
சுகமாக்குகிறார் அல்லேலூயா
இயேசு அல்லேலூயா சுகமாக்குகிறார்.

அல்லேலு அல்லேலு அல்லேலூயா } 2
இயேசு நேசிக்கிறார்
இயேசு அல்லேலூயா
நேசிக்கிறார் அல்லேலூயா
இயேசு அல்லேலூயா நேசிக்கிறார்.

## பொருள் கண்டு கற்றல்

*ஒரு பொருளைக் கொண்டு இயேசு சுகமாக்குகிறார் என்று கற்பியுங்கள்*

ஒரு குழந்தையை உங்களுக்கு உதவியாக முன்னால் அழையுங்கள். அக்குழந்தை உங்கள் முன்னால் உங்களுக்கு முதுகு காட்டி மற்றவர்களை நோக்கி நிற்க வேண்டும். குழந்தையைப் பின்னால் சாய்ந்து விழச் சொல்லுங்கள். நீங்கள் (ஆசிரியர்) குழந்தையைப் பிடித்துக் கொள்ள வேண்டும்.

**இயேசு சுகமாக்குகிறார்!**

அப்படி குழந்தையைப் பிடித்தபின், அக்குழந்தை உங்களை நன்கு அறிவான், அவன் உங்கள் மேல் நம்பிக்கை வைத்தான் என்று விளக்குங்கள். நீங்கள் அவனைப் பிடித்துக் கொள்வீர்கள் என்று விசுவாசித்தான். கதையில் வரும் அப்பெண்ணும், யவீருவும் இக்குழந்தையைப் போலவே, அவர்கள் இருவரும் இயேசுவை அறிந்து, விசுவாசித்தனர். அவ்விருவரும் இயேசு சுகம் தருவார் என்று விசுவாசித்தனர் என்று விளக்குங்கள்.

சாட்சி: குழந்தைகளிடம் இயேசு உங்களைக் குணமாக்கின ஒரு சம்பவத்தை சாட்சியாகப் பகிருங்கள். அல்லது நீங்கள் அறிந்த சரீர சுகவீனத்தோடோ, பெலவீனத்தோடே இருந்த ஒருவர், இப்பொழுது நன்கு சுகமாயிருப்பாரானால், அவரை அழைத்து வந்து, குழந்தைகளிடம் சிருஷ்டிகரான தேவன் எப்படி அவருக்கு சுகம் தந்தார் என்று பகிர்ந்திடச் சொல்லுங்கள்.

## வேத வசன மனப்பாட விளையாட்டு

*இயேசு சுகமாக்குகிறார் என்று கற்பிக்கும் வசனத்தை உபயோகியுங்கள்*

**லூக்கா 6:19** *'எல்லா மக்களும் இயேசுவைத் தொடும்படியாக முயன்றனர். ஏனெனில் அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டது. இயேசு அவர்கள் எல்லோரையும் குணப்படுத்தினார்.'*

# பாடம் 13

**வார்த்தையில்லா போட்டி**

**இயேசு சுகமாக்குகிறார்!**

குழந்தைகளை இரண்டு அணிகளாகப் பிரியுங்கள். முதல் அணியினர் ஓர் அணித்தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அணித்தலைவரை முன்னழைத்து, அவரிடம் வசனத்தின் முன்பகுதியை மற்ற குழந்தைகள் கேட்காதபடி கூறுங்கள். 'எல்லா மக்களும் இயேசுவைத் தொடும்படி முயன்றனர்.' இதை அணித்தலைவர், (வார்த்தைகளை உபயோகிக்காமல்) நடித்துக் காட்ட வேண்டும். அவர் அணியினர் அதை யூகித்துக் கூற முயற்சிக்க வேண்டும்.

சிறிது நேரமாகியும் முதல் அணியினரால் கண்டுபிடிக்க முடியாவிட்டால், இரண்டாம் அணியினர் யூகிக்க வேண்டும். அவர்களாலும் முடியாவிட்டால், ஆசிரியர் சில துப்புகளைத் தந்து உதவ வேண்டும்.

முதல் பாகத்தை அவர்கள் சரியாகக் கண்டுபிடித்தபின் அல்லது நீங்கள் கூறியபின், இரண்டாம் அணித்தலைவர் முன்வர வேண்டும். அவரிடம் வசனத்தின் பின் பாகத்தை மற்ற குழந்தைகள் கேட்காதபடி கூறுங்கள். 'ஏனெனில் அவரிடமிருந்து வல்லமை வெளிப்பட்டது.' இரண்டாம் அணித்தலைவர் இவ்வசனத்தை (வார்த்தையில்லாமல்) இரண்டாம் அணியினருக்கு நடித்துக் காட்ட வேண்டும். இரண்டாம் அணியினர் யூகித்துச் சொல்ல முயற்சிக்க வேண்டும்.

சிறிது நேரமாகியும் அவர்களால் கண்டுபிடிக்க முடியாவிட்டால், முதல் அணியினர் யூகிக்க முயற்சிக்க வேண்டும். அவர்களாலும் முடியாவிட்டால் ஆசிரியர் சில துப்புகளைத் தந்து உதவ வேண்டும்.

குழந்தைகளிடம் நீங்கள் இரண்டாம் பாகத்தைக் கூறியபின் அல்லது அவர்கள் அதை சரியாக யூகித்த பின், வசனத்தின் கடைசி பாகத்தை கூறுங்கள். 'இயேசு அவர்கள் எல்லோரையும் குணப்படுத்தினார்.'

பின் அனைவரும் சேர்ந்து முழு வசனத்தையும் மனப்பாடமாகக் கூற வேண்டும்.

## நடைமுறை செயல்படுத்தல்

***இயேசு சுகமாக்குகிறார் என்று கற்பிக்கும் நடைமுறை செயல்படுத்தல் ஒன்றை உபயோகியுங்கள்***

**குழந்தைகளிடம், உங்களில் யாராகிலும் சுகவீனமாயிருக்கிறீர்களா?**
இயேசு சுகமளிக்க வேண்டுமா? சுகவீனமாக இருக்கும் குழந்தைகள், இயேசு சுகமளிக்க விரும்பினால், உங்களுக்காக ஜெபிக்கலாமா? என்று கேளுங்கள். குழந்தைகளை, சுகவீனமாக இருக்கும் ஒவ்வொருவருக்காக ஜெபிக்கச் சொல்லுங்கள். தேவ ஆவியானவர் குழந்தைகளையும் உங்களையும் ஜெபிக்க வழிநடத்த ஜெபியுங்கள்.

ஜெபம்: இயேசுவின் நாமத்தில் நன்றியறிதலோடு கூடிய ஸ்தோத்திர ஜெபத்தோடு வகுப்பை முடியுங்கள்.